2009 ஜூலை 21] [திரு. பி. தங்கமணி]

வருகின்றனர். அந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்குச் செல்கின்றபோது, அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில்கூட அந்த மில்லின் உரிமையாளர் எதுவும் உதவி செய்யவில்லை. அதுமட்டுமல்லாமல், வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தாலும், அவர்களுக்கு மொழி தெரியாத காரணத்தாலும், தண்ணீர் கொடுப்பதற்குக்கூட ஆள் இல்லாமல், ஒவ்வொருவரும் உயிர் போகின்ற நிலையில் இருந்ததை நான் பார்த்தேன். அப்படி மனிதாபிமானம் இல்லாத நிலை அங்கு இருந்தது. அந்த மில்லிலே நடந்தது என்னவென்றால், வேறு மாநிலத்திலிருந்து ஆட்களை அழைத்து வந்து அவர்களுக்கு 60 ரூபாய் கூலி கொடுத்து 12 மணி நேரம் வேலை வாங்குகின்றார்கள். அந்த 12 மணி நேர வேலைக்குப் பின்னால் அவர்கள் தங்குவதற்கு இடம் இல்லாத காரணத்தாலும், அந்த மில்லிலேயே படுத்திருந்த காரணத்தாலும் தீ விபத்தின்போது அதிக உயிரிழப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகையால், அந்த ஆலை உரிமையாளர்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து, இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுப்பதோடு காயமடைந்தவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

(அஔ) சென்னை, முக்கிய இடங்களுக்குத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டுதல் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அடையாள அட்டையை பிளாஸ்டிக்கில் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

***திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் வருடம், ஆடி அமாவாசை அன்று நான் பேசினேன். அதற்குப் பிறகு உங்களுடைய கருணையால் இன்று வாய்ப்பு கிடைத்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்துபோன எனது தந்தையாரின் நினைவு நாளான இன்று பேச வாய்ப்பு கிடைத்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கன்னிப் பேச்சிலே மயானத்திலிருக்கும் வெட்டியான்களை அரசு ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். பத்தே நாட்களில் அதைச் செய்து கொடுத்த நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ்.வி. சேகர்] [2009 ஜூலை 21

அதேபோல, வீட்டு வேலை செய்து பிழைப்பவருடைய 4 வயது பெண் குழந்தைக்கு, இதய ஆபரேஷன் செய்யக்கேட்டு அந்தக் குழந்தைக்கு இலவசமாக ஆபரேஷன் செய்து இன்று அந்தக் குழந்தை நலமாக இருக்கிறது என்பதையும் நான் இந்தச் சபையில் பதிவுசெய்ய விரும்புகிறேன். அது இலவசமாகவே செய்து கொடுக்கப்பட்ட ஆபரேஷன் என்பதையும் . . . (குறுக்கீடுகள்) என்னுடைய பிரச்சினை, எனக்கு, வேறு எந்த வாய்ப்பும் கிடைக்காததால் இந்த மாதிரி சமயத்தில் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ்.வி. சேகர்: திருக்குறள் மாதிரி சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். அவ்வாறு ஐந்தாறு திருக்குறள்களைச் சொல்ல அனுமதி வேண்டுகிறேன். அதேபோல, சமூக நீதி காக்கும் மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டில் சமூக நீதிக் காவலராக இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்—ஏனென்றால் அவர்கள்தான் பாராட்டக்கூடாது, நான் பாராட்டுவதில் தவறு இல்லை என்று நினைக்கின்றேன்—இதர பிரிவினர் நல வாரியம் ஒன்றையும் அமைத்துக்கொடுத்தால் அது சமூக நீதியாக அமைந்து மக்கள் அனைவருமே சந்தோஷமாக இருப்பார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பால் தினகரன் அவர்கள் பெயரை ஒரு சாலைக்கு வைத்திருப்பதை நான் பாராட்டுகின்றேன். அதேசமயம், நார்டன் ரோடுக்கு தமிழுக்குத் தொண்டாற்றிய திரு. கி.வா.ஜ. பெயரில், கி.வா.ஜ. சாலை என்று வைத்தும், காமராஜர் சாலை–இராஜாஜி சாலையை இணைக்கும் நேப்பியர் பாலத்தை திரு. கக்கன்ஜி பாலம் என்றும் மாற்றி அழைக்கப்பட்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். அதேபோல, சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை ராஜீவ் காந்தி இரயில்வே ஸ்டேஷன் என்றும், எக்மோர் இரயில்வே ஸ்டேஷனை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இரயில்வே ஸ்டேஷன் என்றும் பெயர் மாற்றினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பார்கள். ஆனால் அதை நேரில் பார்த்துக்கொண்டிருக்கும் தந்தையினுடைய மனம் எவ்வளவு சந்தோஷப்படும் என்பதை நான் இங்கே அறிந்துகொள்கின்றேன். காரணம், எனக்கு ஒரு வெற்றி

கிடைக்கும்போது என் தந்தை எவ்வளவு பெருமிதப்படுவாரோ அதேபோலத்தான் இதுவும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் மாண்புமிகு துணை முதல்வர் பொறுப்புக்கு வந்ததை, சரியான நேரத்தில், சரியான நபர் வந்திருக்கிறார் என்று அன்றைக்கு நான் சொன்னேன். இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் அவருடைய செயல்பாடுகளைக் கண்டு, மிகச் சிறப்பாகச் செய்தார் என என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயம், அசெம்பிளியில் இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் பச்சைக் கலரில் அடையாள அட்டை கொடுத்திருக்கிறார்கள். எல்லா எம்.எல்.ஏ–க்களுக்கும் ஈரமான நெஞ்சாக இருப்பதால் நெஞ்சிலேபட்டு உள்ளபடியே நனைந்துபோய்விடுகிறது. ஆகவே, அதை பிளாஸ்டிக் கார்டாக கொடுத்தீர்களென்றால் பார்ப்பதற்கும் நன்றாக இருக்கும். ஏனென்றால் இன்னும் இரண்டு வருடங்கள் நமக்கு பதவிக் காலம் இருக்கிறது. ஆகவே, எனக்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி "Quitters never win; Winners never quit" என்ற பழமொழியைச் சொல்லி என்னுடைய பேச்சை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எல்லோருடைய கோரிக்கைகள், குறைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்றும், நிறைவேற்றப்படும் என்றும் இங்கே கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டமன்றத்தினுடைய வாஞ்சிநாதன் உறுப்பினர் சேகருடைய இந்தக் குறைகளும் கவனிக்கப்படும், பரிசீலிக்கப்படும் என்று கூறி அவர் தந்தையாருடைய ஆத்மா சாந்தியடைய இந்த நாளில் என்னுடைய ஆசீர்வாதத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

(ஆஅ) கரூர், அரவக்குறிச்சி தொகுதிகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் விடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.